மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஊட்டச் சத்துணவுத் திட்டம், முதன் முதலில் 1962–63-ம் ஆண்டில் ஆரணி (வட ஆர்க்காடு மாவட்டம்), பவானிசாகர் (கோயம்புத்தூர் மாவட்டம்), கிருஷ்ணகிரி (தருமபுரி மாவட்டம்), கோவில்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), பட்டுக்கோட்டை, திருவிடைமருதூர் (தஞ்சாவூர் மாவட்டம்), தெ. கல்லுப்பட்டி (மதுரை மாவட்டம்) ஆகிய இடங்களில் கொண்டுவரப்பட்டது. பின்னர் 1966–67-ம் ஆண்டில் இத்திட்டம் ஆத்தூர்-1, பூவிருந்தவல்லி ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும், 1967–68-ம் ஆண்டில் சாத்தூர், அகஸ்தீஸ்வரம், பெரியநாயக்கன் பாளையம் ஆகிய வளர்ச்சி வட்டாரங்களுக்கும் நீட்டிக்கப்பட்டது.

(உ) விவரங்கள் கொண்ட தனிக்குறிப்பு* ஒன்று பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, will the Hon. Minister for Local Administration be pleased to extend the scheme to the Dharmapuri district also ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய தகவல்கள் இப்பொழுது எதுவுமில்லை.

வேதாரண்யத்தை அடுத்துள்ள தோப்புத்துறை துறைமுகம்.

*322 **வினு—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு தொழிலாளர்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த தோப்புத்துறை துறைமுகத்தை செப்பனிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உண்டா ?

(இ) ஆம் எனில், அதுபற்றிய விவரம் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) அவ்விதமான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

ஆசிரியர்களுக்கு வீடுகள்

*323 **வினு—திரு. கரு. சிமைச்சாமி :** மாண்புமிகு அற நிலைய அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கென தமிழ்நாட்டு வீட்டு வசதி யூனிட் மூலம் வாடகைக்கு விடும் திட்டத்தின் கீழ் அல்லது தவணை முறையில் செலுத்தும் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் என்றால் எப்போது முதல் அமல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. கரு. சிமைச்சாமி : சார், மதுரை போன்ற பெரிய நகரங்களில் ஆசிரியர்களுக்கு ஒரு வசதி செய்து கொடுக்கும் முறையில் இனிமேலாவது இம்மாதிரியான ஒரு திட்டத்தை பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : ஹவுஸிங் யூனிட்டில் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு 10 சதவீதம் வாடகை வீதத்தில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படுகின்றன. அது மாத்திரமல்லாமல் 500 ரூபாய்க்கு

* 618—622-ம் பக்கங்களில் இரண்டாம் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

மேலே சம்பளம் வாங்குபவர்களுக்கு கவர்ன்மெண்ட் கோட்டா 20 சத வீதம் இருக்கிறது. அதிலும் இம்மாதிரி ஆசிரியர்களுக்கு ஒதுக்கிக்கொடுக்கப் படுகின்றன. ஆகையால் ஆசிரியர்களுக்காகத் தனியாக ஒரு திட்டம் தேவையில்லை என்று அரசு கருதுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞக்கள் 304, 305, 306, 307 மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒற்றி வைக்கப்படுகின்றன.

சேலம் மாவட்ட வருவாய்த்துறையில் வேலை நீக்கம்

***308 விஞ—திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட விஞவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் ரெவின்யூ இலாக்காவில் மூன்று ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்தவர்களில் எத்தனை பேர் 1967 மார்ச் முதல் 1968 மார்ச் முடிய வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன்: தமிழ் நாடு அரசாங்கப் பணியாளர் தேர்வுக் கழகம் மூலமாக வேலைக்கு எடுக்கப்பட்டு, சேலம் மாவட்ட வருவாய்த் துறையில் மூன்று ஆண்டுக் காலத்துக்கு அதிகமாகப் பணியாற்றிய எவரும் 1—3—1967-லிருந்து 31—3—1968 வரை வேலை நீக்கம் செய்யப்படவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவரவர்களே, சிக்கனச் சீரமைப்புத் திட்டத்தை அமல்படுத்தவிருப்பதாக மேலவையில் அமைச்ச ரவர்கள் சில நாட்களுக்கு முன்பு தெரிவித்தார்கள். அப்படிச் சிக்கனச் சீரமைப்புத் திட்டத்தின் மூலம் ஆட்குறைப்பு செய்யப்போவதில்லை என்று இந்தச் சபையின் மூலம் தமிழக மக்களுக்கு அமைச்சரவர்கள் திட்ட வட்டமாக உறுதி அளிப்பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது கொள்கை பற்றிய விஷயம். கேள்வி நேரத்தில் இதற்குப் பதிலளிக்க முடியாது. உறுப் பினரவர்கள் ஒரு கருத்தைத் திருத்திக்கொள்ள வேண்டும். நான் மேல் சபையில் சொன்ன கருத்து, சிக்கனச் சீரமைப்புத் திட்டம் என்றால் ஏதோ 4 கிளார்க்குகளைக் குறைத்து விடுவது, அல்லது 32 ரூபாயில், 45 ரூபாயில் சிக்கனம் செய்து விடுவது சிக்கனச் சீரமைப்பு அல்ல. சிக்கனச் சீரமைப்புத் திட்டம் என்பது இன்றையதினம் இருக்கும் நம்முடைய நிர்வாக இயந்திரத்திலே பல மாறுதல்கள் செய்ய வேண்டும்; " டெலிகேஷன் ஆப் பவர் " மாற்ற வேண்டும். ஒரே அதிகாரி நான்கைந்து காரியங்களைச் செய்கிறார். ரைஸ் மில்லை எடுத்துக் கொண்டால், தாசில்தார், பிற்பாடு டி. ஆர். ஓ., இப்படி 4 மாதங்கள் தூங்கிக்கொண்டு பிறகு மந்திரிகளின் கையெழுத்துக்கு என்று வருகிறது. உதாரணமாக, அதிகாரங்கள் மாற்றப்படவேண்டும். " பப்ளிக் செக்டார் அண்டர்டேக்கிங்ஸ் ", பஸ் டிரான்ஸ்போர்ட், ஸ்மால் ஸ்கேல் இண்டஸ்ட்ரீஸ், மாதவரம் மில்க் காலனி இவைகளில் இருக்கும் லாபங்களை, வருவாயைப் பெருக்க வேண்டுமென்றுதான் நான் சொன்னேனே தவிர 4 பேர்களைக் குறைப்பது என்று சொல்லவில்லை. குறிப்பாகக் கூறினால், அதனுடைய பெயர் வேலையிலிருந்து வீட்டிற்கு அனுப்புவது என்பது அல்ல.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், சிக்கனச் சீரமைப்பு அவசியம் தான். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டியதும் அவசி யம்தான். சிக்கனச் சீரமைப்பு என்ற பெயரால் வீட்டிற்கு அனுப்பக் கூடிய அதே நேரத்திலே, 55 வயதுக்கு மேல் ஆகி ஓய்வு பெறக்கூடியவர் களை மறுபடியும் நீடித்து இருக்கக்கூடிய அளவுக்கு நீடிக்கப்படுகிறது. அது சரிதானா ? ஆகவே, அதையும் கைவிட வேண்டும். அதிகமாக இருக்கக்கூடிய நேரத்தில் இதை மாத்திரம் சிக்கனச் சீரமைப்பு என்று சொல்லிக்கொண்டு அதை மாத்திரம், ஆயிரக்கணக்காகச் சம்பளம் வாங்கக்கூடியவர்களை நீடித்து வைத்திருப்பது சரியான சிக்கனச் சீரமைப்புத் திட்டமாகுமா ?